**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>ST.C.No. 188-2023</u>**

Deposition of RW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது ரபீக் | Defence | : |
| Father/Husband Name | : முகமது அன்சாரி | Court | : |
| Village | : திருக்களாச்சேரி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 43/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 18.11.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து பெட்டி கடை வைத்து நடத்தி வருகிறேன். புகார்தாரர் எனக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரிடம் நான் கொடுத்தாக சொல்லப்படும் மசாஆ 1 ஆன காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. புகார்தாரரிடம் நிலம், மனை பகுதி ஆகியவற்றை விற்று நான் பணம் எதுவும் பெறவில்லை. நான் புகார்தாரரிடம் எந்த காசோலையும் கொடுக்கவில்லை. எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் ரசியா பானு என்பவர் அன்வர் நிஷாவிடமிருந்து கடன் பெற்றுள்ளார். அந்த கடனிற்கு எனது மனைவி ஜாமின் கையொப்பம் செய்துள்ளார். அதற்காக என்னுடைய பத்திரத்தையும், காசோலையையும் எனக்கு தெரியாமல் எனது மனைவி ரசியா பானுவிடம் கொடுத்துவிட்டார். அதை ரசியா பானு அன்வர் நிஷாவிடம் கொடுத்துள்ளார்.

**புகார் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**